**பருத்தித்துறை நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பருத்தித்துறை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பருத்தித்துறை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகளக மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடார்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபை நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட நாச்சிமார் கோயில் வீதி மிகுதி திருத்த வேலை தொடர்பாக ஏற்பட்ட செலவு ரூபா 116,012 ஆனது காணி கட்டடங்களிற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 116,012 பெறுமதியினால் நடை முறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதன அரசிறை உதவு தொகை ஆகியவற்றின் பெறுமதி அதிகரித்து வெளிப்படுத்த ப்பட்டிருந்தது. | இவ்வேலைத்திட்டத்திற்கான செலவினம் தவறுதலாக காணி கட்டடங்களிற்குள் உள்ளடக்கப்படடுள்ளது. தற்போது இத்தவறு நாட்குறிப்பின் மூலம் சீர்செய்யப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு நிதிக்கூற்றில் நாட்குறிப்பின் பிரகாரம் வெளிப்படுத்தப்படும். | குறித்த தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான 06 காணிகளின் பெறுமதிகள் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் நடைமுறையல்லாச் சொத்தின் பெறுமதி குறைத்து வெளிப்படுத்தப் பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான 06 காணிகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அதற்குரிய உறுதிகள் மற்றும் ஆவணங்கள் இன்மையால் சொத்துக் கணக்கிற்கு உள்வாங்கப்பட வில்லை. இதற்குரிய உறுதிகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் இக்காணிகளின் பெறுமதிகள் சொத்துக்கணக்கிற்கு சேர்க்கப்பட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படும். | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த குறைபாடுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் சபையினால் 04 வேலைத்திட்டங்களும் 02 வாகனத் திருத்தங்களும் நிறை வேற்றப்பட்டிருக்காத போதிலும் செயலாளரின் பெயரில் உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கில் உள்ளடக்கப் பட்டிருந்தமையால் ரூபா 6,035,326 பெறுமதியால் செலவிலும் கூடிய வருமானம் குறைத்தும் மற்றும் நடப்பு பொறுப்புக்கள் அதிகரித்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சில்லறைக் கடன் கொடுத்தோர் கணக்கிற்கு ஒதுக்கப்பட்ட 04 வேலைத்திட்டங்களுக்கும் மீளாய்வாண்டில் கொடுப்பனவுச் சிட்டைகள் கிடைக்கப் பெறாமையினால் சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கிற்கு ஒதுக்கப்படடது. தற்போது இவ்வேலைத் திட்டங்களுக்குரிய கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளது. தற்போது வாகன திருத்தவேலைகள் முடிவுற்று கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி கொடுப்பனவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | நகரசபைக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 157 அன் சரத்து 7 (ஊ) இற்கமைவாக சபையின் எல்லைக்குள் பொருத்தப்பட்ட விளம்பர பலகைகளிற்கு வழங்கப்படும் உரிமங்களிற்கு கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தும் நிர்மாணிக்கப்பட்டிருந்த 15 எண்ணிக்கையான விளம்பரப் பலகைகளிற்கு கட்டணம் அறவிடப்படாமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 49,725 பெறுமதியால் வருமானம், வருமான மிகை குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | தங்களது கணக்காய்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட 15 விளம்பரப் பலகைகளுக்கான கட்டணங்களை அறவீடு செய்வதற்கு உரிய கடை உரிமையாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| - இலக்கம் 571 | 02 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 604,609 காலங்கடந்த நானாவித வைப்பு மற்றும் ஒப்பந்தகாரர் வைப்புப்பணம் தொடர்பாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதி ஒழுங்கு விதி ஏற்பாடுகளிற்கமைவாக விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 36,053,271 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 41,959,620 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| | நகர சபை கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயம் 160(1) இற்கமைய நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பனவற்றின் மீது அறவிடப்பட வேண்டிய ரூபா 1,625,742 பெறுமதியான ஆதனவரி நிலுவையானது 02 வருடங்களிற்கு மேலாக அறவிடப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. | சபையினால் 2022.01.23 ஆம் திகதி தொடக்கம் 2022.01.31 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட நடமாடும் சேவை, நடுக்கட்டு உத்தியோகத்தர் மூலமும் 2022.05.31 ஆம் திகதி வரை நிலுவையில் ரூபா 2,797,084 அறவிடப்பட்டுள்ளது. | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளபடல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| | சபையினால் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்படும் ஆதனங்கள் தொடர்பாக 61 கடைகளின் உடன்படிக்கையானது 05 வருடங்கள் அல்லது 03 வருடங்களிற்கு ஒருமுறை மீள புதுப்பிக்கப்பட வேண்டி இருந்தபோதும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வாடகை நிலுவையாக ரூபா 706,149 காணப்படுகிறது. | மேற்படி 13 கடைகள் ஒப்பந்தங்களை புதுப்பித்துக் கொள்வதற்கு உரிமையாளர்களுக்கு ஆவணங்களை ஒப்படைத்துள்ளார்கள். ஏனைய கடைகள் உடன்படிக்கை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் மன்றக்காணி நிலுவையில் ரூபா 13,900 அறவீடு செய்யப்பட்டுள்ளது.<br>நவீன சந்தைக்கடை வாடகை நிலுவையில் ரூபா 236,192 அறவீடு செய்யப்பட்டுள்ளது. மிகுதி ரூபா 316,359 கொவிட் 19 காரணமாக கடை இயங்காத காலப்பகுதிக்குரிய தொகையாகும். இத்தொகையினை விலக்கழிப்பு செய்வதற்கு கௌரவ ஆளுநரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தங்கள் உரிய காலப்பகுதியில் மீள்புதுப்பிக்கப்பட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் குறித்த நிலுவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைவுபடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **எதிர்பார்த்த பிரதிபலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளாமை** | | |
| | சபைக்கு சொந்தமான நவீன சந்தையின் 07 மேல்மாடி கடைகள் 2013 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட போதிலும் இற்றைவரை அவற்றினை குத்தகைக்கு வழங்கப்படாமையால் மீளாய்வாண்டில் ரூபா 260,000 பெறுமதியால் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. | குறித்த கடைகளை வியாபார நோக்கத்திற்காக ஒரு வருட வாடகையை முற்பணமாக பெற்று வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் கோருவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்காக 13.05.2022 ஆம திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சபையின் வருமான மூலங்களை வருமான நோக்கில் பூரணமாக பயன்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 121,451,369 பெறுமதியான நிலையான வைப்பு நிதியானது நகர அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாது வட்டி வருமானம் உழைக்கும் நோக்கில் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்குரிய வட்டி வருமானம் சபையின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது உரிய நோக்கம் குறித்தே நிலையான வைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சபையில் காணப்படும் நிதியினை உத்தம மட்டத்தில் செயற்பாடுகளிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையினால் ரூபா 4,160,000 பெறுமதியான Vibrationg Roller இழப்பு தொடர்பாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | Vibrating Roller – 103,000.00 Road Roller 7பா 1,114,769 இச்சொத்து இழப்புக்களை பதிவழித்தல் தொடர்பாக் கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்றுத்தருமாறு விசாரணைக் குழு அறிக்கையின் பிரதியுடன் ஏனைய ஆவணங்களின் பிரதிகளும் இணைத்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளாருக்கு 2022.03.17 ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்க்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| **ஊழியர் கடன்** | | |
| மீளாய்வாண்டில் சபையினால் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மற்றும் ஓய்வுபெற்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 212,890 பெறுமதியான இடர்கடன் மற்றும் விசேட முற்பணம் என்பன அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒரு அலுவலரின் மரணப் பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 95,740 ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் திரு.எஸ்.சுரேஸ்குமார் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய விழா முற்பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. | கடன் நிலுவையினை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ள தாபன விதிக்கோவைகளின் ஏற்பாடுகளிற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 வாகன முறைமைகளை முகாமைத்துவம் செய்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான கனரக வாகனங்கள் என்பவற்றினை பயன்படுத்தி சபைக்குரிய வருமானத்தினை ஈட்டக்கூடியதாக இருந்தும் மீளாய்வாண்டில் அது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | Gully Bowser சேவையின் மூலம் பெறப்படும் திரவக் கழிவுகளை கொட்டுவதற்கு பருத்தித்துறை நகரசபைக்கு பொருத்தமான இடவசதி இன்மையால் இச்சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது. Compactor பயன்படுத்தும் சேவை மிகக் குறைவாக காணப்படுகின்றது. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |